*1*

# ஞாயிற்றுக்கிழமை

## மத்தேயு 21:1-11; 26:6-13; மாற்கு 11:1-11; 14:3-9; லூக்கா 19:29-44; யோவான் 12:1-19

*"அவர் போகையில், அவர்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள். அவர் ஒலிவமலையின் அடிவாரத்துக்குச் சமீப மாய் வருகையில், திரளான கூட்டமாகிய சீஷரெல்லாரும் ... சந்தோஷப்பட்டு, ... மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்" (லூக்கா 19:36-38).*

என்ன ஒரு நாள்! என்ன ஒரு வாரம்! இது தேவனுடைய குமாரனாகிய இயேசு மரித்த வாரத்தின் தொடக்கமாயிருந்தது! இது தேவனுடைய மாபெரும் ஊழியத்தின் - சிலுவையின் மூலமாக அவர் செய்த ஊழியத்தின் - வாரமாக இருந்தது! இது உலகத்தை மாற்றிய மற்றும் என்னை மாற்றிய வாரமாக இருந்தது!

விவரங்கள் ஒன்றாகக் கூட்டிப் பார்க்கப்படும்போது, வேதாகமத்தில், கிறிஸ்துவின் வாழ்வில் நாற்பதுக்கும் சற்று அதிகமான நாட்கள்தான் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, இருப்பினும் அவரது மரணத்தின் வாரத்தைப் பற்றிய தெய்வீக எடுத்துரைப்பு, அவரது செயல்கள் பற்றிய எண்ணற்ற விவரங்களைத் தருகிறது. அந்த ஒரு வாரத்தில் இயேசு செய்தவை மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்ற புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் மூன்றில் ஒரு பகுதியைப் பயன்படுத்துகின்றன; யோவான் சுவிசேஷத்தின் சரிபாதி முழுவதும் இவ்விவரங்களை மாத்திரமே கொண்டுள்ளது. இதற்குக் கொடுக்கப்பட்டுள்ள இடம் மாத்திரமேகூட இவ்வாரம் மிகமுக்கியமானது என்பதை நமக்குக் கூறுகிறது.

இயேசு தமது ஊழிய காலத்தில், எருசலேமில் அதிக நேரத்தைச் செலவிட்டதில்லை. இப்போது, அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பினார் (லூக்கா 9:51). அவர் முழுமையும் கட்டுப்பாட்டில் இருந்தார்; அவர் மரிப்பதற்காக எருசலேம் சென்றார்.

இந்தக் காலகட்டத்தின்போது இயேசு என்ன செய்தார்? அவர் போதித்தார்! அவர் சிலுவையின்மீதுகூட போதித்தார்! யூதர்கள் தாங்கள் மேசியாவை விரும்பியதாக உரிமைகோரினர்[1]; இருப்பினும், அவர்

*வந்தபோது, அவர்கள் அவரைச் சிலுவையில் அறையச் செய்தனர்! ஒரு மேசியா பற்றிய அவர்களது கருத்தை அவர் நிறைவு செய்யவில்லை. அவர் நமக்குப் பொருந்துகிறாரா? வேதாகமரீதியான கிறிஸ்துவை நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா?*

*உலகை மாற்றிய வாரத்தின் ஞாயிற்றுக்கிழமையை நாம் கண்ணோக்கு வோம். நித்தியம் முழுவதும் இயேசு இவ்வாரத்தில் செய்தவற்றையும், நாம் அதற்கு எவ்வாறு பதில்செயல் செய்கிறோம் என்பதையும் சார்ந்துள்ளது.*

## அபிஷேகம் செய்யப்படுதல்

*இயேசு அபிஷேகம் செய்யப்பட்டதே ஞாயிற்றுக்கிழமையின் முதல் நிகழ்ச்சியாக இருந்தது (மத்தேயு 26:6-13; மாற்கு 14:3-9; யோவான் 12:1-8). அவர் பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் என்பவரது வீட்டில் இருந்தார்: "அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள், மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான்" (யோவான் 12:2).[2] இராவிருந்தின் போது, மரியாள் விலையுயர்ந்த தைலத்தினால் இயேசுவை அபிஷேகம் செய்தாள். அது சாதாரண மனிதரின் ஒரு ஆண்டுக்கூலிக்குச் சமானமான விலைமதிப்பு உடையதாக இருந்தது.*

*இங்கு நாம் பெற்றுக்கொள்ளுதலின் பாடத்தைக் காண்கிறோம். இயேசு தம்முடைய வாழ்வு முழுவதிலும் கொடுத்திருந்தார். இடர்ப்பாட்டு வேளைகளில், பெற்றுக்கொள்வதைவிடக் கொடுப்பது சுலபமாயிருக்கலாம், ஆனால் இயேசு இரண்டையும் போதித்தார்.*

*யூதாஸ், "இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன?" என்று கூறியபோது (யோவான் 12:4-6), அவனது உண்மையான குணம் மேலே எழும்பித் தெரியலாயிற்று. அப்போஸ்தலர்கள்[3] இயேசுவை இவ்விதம் வெளிப்படையாக விமர்சனம் செய்யமுடியும் என்று நினைத்தது எவ்வாறு என்பது திகைப்புக்குரியதாக உள்ளது! இயேசுவை அவர்கள் கடிந்து கொண்டதென்பது கடுமையான தாகவும் மரியாதையற்றதாகவும் இருந்தது.*

*உபகாரம் செய்தல் என்பது நமக்கும் பிறருக்கும் ஆசீர்வாதமாக உள்ளது, ஆனால் இயேசுவுக்கு ஊழியம் செய்தல் என்பது உபகாரம் செய்தலைவிட மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட, இயேசு*வுக்காகக்* கொடுக்கப்பட்ட எதுவும் "வீணானது" என்று நினைக்கப்பட முடியாது. இயேசு, யூதாஸினுடைய குற்ற உணர் வுள்ள நோக்கங்களை வெளிப்படுத்தினார், மற்றும் அவர் மரியாளின் அன்பினால் விளைந்த அபரிமிதமான கொடையைக் கனப்படுத்தினார். அன்பு என்பது இயேசுவுக்குக் கொடுக்கிற எதுவும் எப்பொழுதும் மிகச்சிறிய தாகவே இருக்கிறது.*

*உண்மையான நண்பர்கள் விலை உயர்ந்தவர்களாக உள்ளனர் என்பது இந்தக் காட்சியமைவில் நாம் காணுகிற இன்னொரு பாடமாக உள்ளது. இதற்குமுன்பு, இயேசு தம் நண்பரான லாசருவை மரித்தோரில் இருந்து*

*உயிர்ப்பித்திருந்தார் (யோவான் 11). அந்த உயிர்ப்பித்தலானது இயேசுவைச் சிலுவையில் அறையும்படி யூதர்கள் கொண்ட நோக்கத்தின் பகுதியாக இருந்தது. நமது நல்ல செயல்கள் சில வேளைகளில் வெறுப்புக்கும் குற்றம்சாட்டப்படுதலுக்கும் காரணமாகக்கூடும்.*

## வெற்றிப் பிரவேசம்

*இயேசு ஒருபோதும் "துதியான வரவேற்பு" ஒன்றைக் கொண்டிருந்த தில்லை. இவ்விடத்தில் அப்படிப்பட்ட ஒன்றைப் பெறுவதை அவர் தேர்ந்துகொண்டார் (மத்தேயு 21:1-11; மாற்கு 11:1-11; லூக்கா 19:29-44; யோவான் 12:12-15ஐக் காணவும்). அவர் ஒரு கழுதையைக் கொண்டுவரச் சொல்லி அதன்மீது ஏறி யூதர்களின் இராஜாவாக நகருக்குள் பவனி சென்றார். அவர் அவ்வாறு செய்ததில், அவரைப்பற்றிய முடிவு ஒன்றை மேற் கொள்ளும்படி மக்களை வற்புறுத்தினார். "என்னை ஏற்றுக்கொள்ளுங்கள் அல்லது என்னைக்கொன்றுவிடுங்கள்!" என்று அவர் கூறினார். அவர் தமது "வெற்றிப் பிரவேசத்தை" ஜாக்கிரதையாகத் திட்டமிட்டார்.*

*ஒருக்காலும் ஒருவரும் பயணம் செய்திராத கழுதைக்குட்டி யொன்றைக் கொண்டுவரும்படிக்கு அவர் இரண்டு சீஷர்களை[4] அனுப்பி னார். இது திகைப்புக்குரியதாக உள்ளது! கழுதைக்குட்டியின் உரிமையாளர் இயேசுவை அறிந்தவராகவும் அவர்மீது விசுவாசம் கொண்டவராகவும் இருந்திருக்க வேண்டும். இயேசு, "பைசா ஒன்றும் இல்லாத இராஜாவாக" இருந்தபடியால், அவர் இந்தக் கழுதையைக் கடனாகப் பெற வேண்டிய தாயிற்று. அவர் [தமது] குடிமக்களிடத்தில் சென்றார்; வழக்கமாக குடி மக்கள் தாம் அரசரிடத்தில் செல்லுவார்கள்.*

*அவருக்கு முன்பாகச் சாலையில் மக்கள் கிளைகளையும் ஆடை களையும் பரப்பினார்கள். அவர்கள், "இரட்சியும், நாங்கள் ஜெபிக்கிறோம்" என்று அர்த்தப்படுகிற வகையில், "ஓசன்னா," என்று சத்தமிட்டுக் கூறினர். அவரது அக்களிப்பும் கொண்டாட்டமும் நிறைந்த பிரவேசமானது சகரியா 9:9ல் காணப்படும் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது.*

*இயேசு எருசலேம் சென்று சேர்ந்தவேளையில், அவர் உணர்வு மேலிட் டவர் ஆனார் - அவரது இருதயம் துக்கத்தினால் வெடித்தது. அவர் எருசலே முக்காக அழுதார் (லூக்கா 19:41). அவர் தம்மை மறுதலிக்கப் போகிறவர் களுக்காக உரத்த சத்தமிட்டு அழுதார். எருசலேம் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட நகரமாக இருந்தது. பத்தாயிரம் நினைவுகள் மாயமாகிக் கொண்டிருந்தன; நேரம் ஓடிக்கொண்டிருந்தது. எருசலேம் முற்றிலும் அழியவிருந்தது (கி.பி. 67-70).*

*இயேசு கழுதையின்மீது அமைதியாக நகருக்குள் பவனி சென்றார். அவரது நடவடிக்கைகள் விரைவில் அவரைச் சிலுவையில் அறையவிருந்த ரோமர்களைக் கவலைப்படுத்தவில்லை.*

*ஞாயிற்றுக்கிழமை கூடிய கூட்டம் கலிலேயர்களைக் கொண்டதாக இருந்தது; ஆனால் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கூடிய கூட்டம், யூதேயா ஜனங்களைக் கொண்டதாக இருந்தது. அந்தக் கூட்ட*

மானது அவரது மரணத்திற்காகக் கூவினதாக இருந்தது. சமாதானப் பிரபு நகருக்குள் வந்தபோது, அவர் பாடல்களாலும் துதிகளாலும் கனப்படுத்தப் பட்டார். இருப்பினும், இது அவர்தம் விரோதிகளை நடவடிக்கை மேற் கொள்ளும்படி வற்புறுத்திற்று. உலகமே அவரைப் பின்சென்றதாக அவர்கள் நினைத்தனர் (யோவான் 12:19).

பரிசேயர்கள் பயமடைந்தனர்! இயேசு தமது சீஷர்களைக் கடிந்து கொள்ள வேண்டும் (அல்லது அமைதிப்படுத்த வேண்டும்) என்று அவர்கள் அவருக்குக் கட்டளையிட்டனர், ஆனால் இயேசு (அதைச்செய்ய) மறுத்து விட்டார். அவரது சீஷர்கள் அவரைத் துதிக்காதிருந்தால், அங்கிருந்த கல்லுகள் அவரைத் துதிக்கச் சத்தமிட்டிருக்கும் (லூக்கா 19:40). இந்த "துதி வரவேற்பு" நினைவுக்குரியதாக இருந்தது. எருசலேம் அவருக்கு *செவிகொடுக்க* மறுத் திருக்கையில் மக்கள் *காணத்* தவறக் கூடாதிருந்தனர்!

இயேசு தமது "துதி வரவேற்பை" கொண்டிருந்தார். நாம் இதுபோன்ற ஒன்றை அவருக்குக் கொடுப்போமா?

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்புகள்

[1]"மேசியா," என்பது "கிறிஸ்து" என்ற கிரேக்க வார்த்தைக்குச் சமமானதும், "அபிஷேகம் பண்ணப்பட்டவர்," என்று அர்த்தப்படுவதுமான எபிரெய வார்த்தையிலிருந்து வந்துள்ளதாகும் (யோவான் 1:41; 4:25ஐக் காணவும்). [2]நமது காலக் கணக்கின்படி இந்த நிகழ்ச்சி சனிக்கிழமையன்று நடந்தது. நமது நாளானது நள்ளிரவு 12:00 மணிக்குத் தொடங்குகையில், யூதர்களின் நாளானது மாலை 6:00 மணிக்கு தொடங்கிற்று. ஆகையால், இந்த இராவிருந்து ஞாயிற்றுக்கிழமை தொடங்கிய வேளையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி பற்றிய நாள் வரிசைக் கிரமமான குறிப்புகளை யோவான் கொடுத்தார்: (1) இயேசு பஸ்காவுக்கு ஆறுநாட்கள் முன்பாக பெத்தானியா ஊருக்கு வந்தார் (யோவான் 12:1), மற்றும் (2) "அடுத்தநாளில்" இவ்வுணவுக்குப் பின்பு அவரது வெற்றிப் பிரவேசம் நடைபெற்றது (யோவான் 12:12). [3]அப்போஸ்தலர்கள் என்பவர்கள் "அனுப்பப்பட்ட" செய்தியாளர்களாக இருந்தனர். அவர்கள் இயேசுவின் இராஜ்யத்தைப் பரப்ப உதவுவதற்கு அவரால் தேர்ந்துகொள்ளப்பட்ட பன்னிரெண்டு ஆண்களாயிருந்தனர் (லூக்கா 6:13-16ஐக் காணவும்). [4]"சீஷர்கள்" என்றால், "பின்பற்றாளர்கள்" அல்லது "கற்பவர்கள்" என்று அர்த்தப்படுகிறது. சில வேளைகளில் இவ்வார்த்தை இயேசுவைப் பின்பற்றுபவர்களைக் குறிப்பதற்குப் பொதுவாக பயன்படுத்தப்படுகிறது (மத்தேயு 9:14ஐக் காணவும்) மற்றும் சில வேளைகளில் இது பன்னிரண்டு அப்போஸ்தலர்களை மாத்திரம் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது (மத்தேயு 10:1ஐக் காணவும்).